ஓம்

# எங்கள் கிருஷ்ணன்

பாரத தேசம் பழம்பெரும் வேதாந்த ஞானமும் நாகரிகமும் மிகுந்தது; கலைச் செல்வங்கள் நிறைந்தது. பாரிலுள்ள செல்வங்கள் அனைத்தையும் படைத்த பாரத நாடு இடைக்காலத்தே அன்னியர் படையெடுப்புக்களால் நாட்டில் வளங்குன்றி, வாழ்வு குன்றி, வளர் கலைகள் குன்றி, அமைதி குன்றி அல்லலுற்றது. ஞானமும் விஞ்ஞானமும் தேயத் தலைப்பட்டன. ஆயினும் கரும பூமியாகிய இப்புண்ணிய நாட்டில் அவ்வப்போது ஞானியரும், யோகியரும், கவிஞர்களும், விஞ்ஞானிகளும் தோன்றி பழம் பெருமையை பழுதுருவண்ணம் காத்தனர்.

அண்மைக் காலத்தில் நம்நாட்டில் மேதை ஜகதீச சந்திரபோஸ், ஸர் C. V. ராமன், P. C. ராய் போன்ற விஞ்ஞான வித்தகர் பலர் தோன்றினர். நம் பாரதத்தின் தென் பகுதியில் உதித்த டாக்டர் K. S. கிருஷ்ணன், அவர்கள் இன்று உலக விஞ்ஞானியர் போற்றும் உயர் மேதையாய்த் திகழ்கின்றார். அவரைப் பெற்ற நாமும் நமது நாடும் பெருமிதம் கொள்கின்றோம்.

மக்களுக்கு இனம், மொழி, நாடு என்ற அபிமானம் இயற்கையாகத் தோன்றுகின்றது. அவ்வகையில் எங்கள் பிறப்பிடமாகிய ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் உதித்த உத்தம வித்தகரின் மேன்மைகளை எண்ணி உள்ளம் பூரிக்கின்றது; உவகை பொங்குகின்றது. "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச், சான்றோன் எனக்கேட்ட தாய்" — என்ற வள்ளுவரின் வாக்கை எண்ணி இம்பூது எய்துகின்றோம்.

டாக்டர் K. S. கிருஷ்ணன் அவர்கள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் கோதை பிறந்த திருத்தலத்திலே பயின்றவர். வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதையின் திருப்பாவை என்னும் தெள்ளமுதத்தைப் பருகி, உள்ளத்தில் கள்ளமிலா பக்தி நிறைந்தவர். உலகம் இப்புண்ணியனை பலவாறாகப் போற்றினார், அதனால் அவர் நெஞ்சத்தில் செருக்குச் சிறிதும் கொள்ளாதவர்; கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவர்.

இவரது உயர் ஞானம் விஞ்ஞானத்துறைக்கு பெரிதும் வேண்டியிருந்ததுபோலும்; இவர் ஸர் C. V. ராமனுடன் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, பல நுண்ணிய ஆராய்ச்சிகளைத் திண்ணிய முறையிலாற்றி வெற்றிகண்டார். இதை அறிந்த நமது பாரத அரசாங்கம் அவரை நன்கு பயன் படுத்திக்கொண்டது. இன்று வையகம் இவரை வானளாவப் புகழ்கின்றது ! போற்றுகின்றது ! வாழ்த்துகின்றது !.

பாரத நாட்டில் பிறந்த நாம் பழம் பெருமை மட்டும் பேசுவதில் சிறப்பில்லை. விஞ்ஞானத் துறையில் மேல்நாட்டாரைவிட முன்னேற்றம் காணவேண்டும். ஆனால் நமது விஞ்ஞான வளர்ச்சி வையகத்தை வாழவைக்கவும், வளமாக்கவும் பயன்படவேண்டும்; ஆக்கப்பாதையில் அமைய வேண்டும். அதற்கு ஆத்ம ஞானத்துடன் கூடிய விஞ்ஞானமே துணைசெய்யும். அத்தகைய திருப்பணி செய்தற்கு டாக்டர் கிருஷ்ணனைப்போன்ற மேதைகள் எண்ணற்றோர் தோன்ற வேண்டும்; அப்போதுதான் பாரதியார் கூறியதுபோன்று "நம் பாரதநாடு பாருக்குள்ளே நல்ல நாடாக"த் திகழமுடியும்.

நமது வித்தகர் டாக்டர் K. S. கிருஷ்ணன் அவர்களுக்கு இன்று அறுபது ஆண்டுகள் நிறைந்துள்ளன. மணி விழா நடைபெறுகின்றது. இந்த நன்னாளில் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து பாருக்குப் பயனுள பணிகள் பல புரிய அவருக்கு நீண்ட ஆயுளும், திடதேகமும், வளமைகள் பலவும் அருளிக் காக்குமாறு இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

இராஜபாளையம்,
1—12—58.

S. அர்ஜுன ராஜா,
ராமலக்ஷ்மி நிவாஸ்.

ஆறுமுகா பிரஸ், இராஜபாளையம்; —58.

உ

சிவமயம்

# புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின்

25-வது ஆண்டு வெள்ளிவிழா விற்கும்

ஸ்ரீ சரஸ்வதி வித்தியா சாலையின் 15-வது ஆண்டு விழாவிற்கும்

தலைமை வகிக்கும்

அலகாபாத் பல்கலைக் கழக பௌதிக சாஸ்திரப் பேராசிரியர்

உயர் திருவாளர்

## டாக்டர். சர். K. S. கிருஷ்ணன் Kt; D. Sc; F. R. S.

அவர்கட்கு உவந்து வழங்கும்

# வரவேற்புரை.

| | | | |
|---|---|---|---|
| வருக! | வருக! | மகிழ்வுடன் | வருக! |
| அரும்பெருங் | கலைமிகும் | அறிஞரே | வருக!! |
| திருமிகத் | தவழுந் | தென்றமிழ் | நாட்டு |
| மறுவில் வண் | கீர்த்தி | மகிபனே | வருக! |
| ஆய | கலைபல | ஆய்ந்து கற் | றறிந்த |
| K. S. | கிருஷ்ண | பெரியோய் | வருக! |
| அரிய விஞ் | ஞானத் | துறையிலே | சிறந்த |
| அறிஞரென் | றிந்த | அவனியி | லெங்குந் |
| தெரிந்திட | விளங்கிச் | சீமை சென் | றினிதே |
| திரும்பி நம் | நாட்டுத் | தேசிய | பௌதிக |
| சாலையின் | தலைமைப் | பதவியை | ஏற்றுத் |
| துலங்கிட | விருக்குஞ் | சுடரே, | வருக!! |
| புகழ்மணங் | கமழும் | புதுவயற் | பதியில் |
| தமிழ்மணங் | கமழத் | தழைத்து நின் | றிலங்க |
| நாமகள் | பெயரால் | நடைபெறும் | சங்கத்(து) |
| இருபான் | ஐந்தாம் | இசை பெறு | விழாவும் |
| சரஸ்வதி | வித்தியா | சாலையின் | அரிய |
| ஒருபான் | ஐந்தாம் | உயரிய | விழாவும் |
| ஒருங்கே | நடக்கும் | ஓங்கெழில் | நாளாம் |
| வெள்ளி | விழாவில் | விருப்புடன் | தலைமை |
| தெள்ளிதில் | தாங்கிய | சீலரே; | தாங்கள், |
| நீடிய | காலம் | நீடிசை | யோடு |
| பீடுற | வாழ்ந்து | பெரும்பயன் | நமது |
| நாட்டுக் | களித்து | நற்றொண் | டாற்ற |
| வேண்டிய | வரமும் | சுகமும் | பிறவும் |
| விருப்புட | னருள | விமலனை | நாங்கள் |
| இருகரங் | குவித்து | இறைஞ்சுகின் | றோமே!! |

சர்வசித்து. சித்திரை. ௨௰௨
புதுவயல்

தங்களன்புள்ள,

**ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தார்.**

செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை.

முத்தமிழ் ஓங்குக!

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

தில்லித் தமிழ்ச் சங்கத் தலைவர்

## டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் F. R. S. அவர்கள்

12—9—1959-ல் திருச்சிக்கு வருகை தந்தபோது

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தார் மனமுவந்தளித்த

# வரவேற்பு இதழ்.

**தலைநகரின் தமிழ்ச்சங்கத் தலைவர் அவர்களே,**

வருக, வருக, தங்கள் வருகை நல்வரவாகுக. கடல் கடந்தும், வடக்கேயுள்ள பல நகரங்களிலும் நமது தமிழ்த் தாயின் மக்கள் பற்பல துறைகளில் ஈடுபட்டு வாழ்கின்றார்கள். புத்துணர்ச்சியுடன் மக்கள் தமிழார்வம் கொண்டு ஆங்காங்கு தமிழ்ச் சங்கங்கள் நிறுவித் தாய் மொழியைப் பேணுகின்றனர். தில்லித் தமிழ்ச் சங்கத் தலைவ ராகிய தங்களுக்குத் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் தனது அன்புக் கரம் நீட்டி வரவேற்பை அளிக்கிறது.

**விஞ்ஞானப் பேரறிவாளரே,**

தாங்கள் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி. பல துறைகளில் புகழ்பெற்ற அறிஞர். பேருழைப்பு மிக்கவர். விஞ்ஞானத் துறையில் தாங்கள் கொண்டுள்ள பேரூக்கத்திற்குச் சற்றும் குறையாமல் தமிழார்வமும் தமிழ்ப் புலமையும் பெற்று விளங்குவது கண்டு பெரிதும் போற்றுகிறோம். தனித் தமிழில் பௌதீக நுட்பங்களைப் பேச முடியும் என்ற தங்கள் துணிபு கண்டு பாராட்டுகிறோம். தமிழில் முடியுமா என்று ஐயுறும் ஒரு சிலர்க்குத் தங்கள் தமிழாற்றல் தக்கதொரு விடையாக அமைந்திருப்பதை எண்ணிப் பெருமகிழ்வு அடைகிறோம். செல்லுமிடமெங்கும் தமிழ்க் கொடியும் ஏந்திச் செல்லும் தங்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**பேரன்புமிக்க பெரியீர்,**

அறுபதாண்டுகள் நிரம்பப் பெற்ற தாங்கள் பரந்த நாட்டின் தலை சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவரென்று உலகப் புகழ் படைத்து விளங்குகின்றீர்கள். தாங்கள் பெற்ற புகழ் தமிழ் பெற்ற புகழாக எண்ணிப் பெருமை கொள்ளுகிறோம். தங்களுக்கு மீண்டும் எங்கள் நல்வரவேற்பு உரித்தாகுக.

இங்ஙனம்,

**திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தார்.**

S. N. Printers, Tiruchirapalli-2.

181 / 1364

॥ श्रीमते रामानुजाय नमः ॥



श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यो भयवेदान्तप्रतिष्ठापनाचार्यैः श्रीमद्रामानुजापरावतार श्रीमद्वरवरमुनीन्द्राष्टदिग्गजप्रथमपरिगणितैः श्रीमद्रम्यजामातृयतिवरकृपालब्ध श्रीवरमङ्गासमेत श्रीदेवनायकान्तरङ्गकैङ्कर्यैकधुरन्धरैः अखण्डमहीमण्डलालंकारमहीपालकोटीरकोटिघटितमणिकिरणपटलपाटलितपादपीठपर्यन्ताचार्यैः परमपुरुषार्थलक्षणविलक्षणमोक्षैकप्रयोजनार्थ पञ्चकज्ञानैकसाधन श्रीमदष्टाक्षरादिरहस्यत्रयजगदुज्जीवनाचार्यैः सकलमुनिजनमानसारविन्दसन्दोहसमुल्लाससमुल्लसित श्रीराजहंसावतारैः श्रीभगवद्रामानुज सिद्धान्तनिर्धारकाचार्यसार्वभौमैः सर्वतन्त्रस्वतन्त्रैः

## श्रीतोदाद्रिरामानुजयतीन्द्रैः

शमदमादि सकल कल्याण गुणोपेतानां श्री
भगवद्भागवताचार्य कैङ्कर्य धुरन्धराणां
श्रीभगवद्रामानुजसम्प्रदायाभिवर्धनकुतू
हलानां अस्मदरङ्गनगरप्पन्सन्निधि
सुरभ्यान्तरङ्गाणां श्रीमतां डाक्टर सर
के. एस्. कृष्णय्याङ्गार् महाशयानां
आयुराशास्ते, :: यन्मङ्गलं सुपर्णस्य बिनता
कल्पयत्पुरा. अमृतं प्रार्थयानस्य तत्ते भवतु
मङ्गलम्।

Ananda Press, Madras.

"आयुर्दीर्घमरोगता श्रियं बन्धुमैश्वर्यमत्याहतं,
पुत्रान्भद्रगुणान्ददातु सततं सुत्राममान्यम्पदं।
पारावारसुता पयोधर तटी पाटीर पङ्काङ्कितः,
श्यामः कामपिता पितामहपिता श्रीरङ्गशायी हरिः॥

इत्याद्युक्तप्रकारेण स्वरूपानुरूपं क्रियमाणं मङ्गलाशासनम्। अत्र तोताद्रिनगरे अस्मद्रङ्ग नगरप्पन्सन्निधिनिस तदीयाराधनोभय-वेदान्तकालक्षेपादिकं सुसम्पन्नं चलति। तत्र भवदीय कुशलोदन्त पत्रिकाप्रतिपदं प्रेषणीया। तत्र देहलीमहानगरे भवतां षष्ठ्यब्दपूर्त्युत्सवो १४·१२·५८ दिवसे गुरुवासरे प्रचलिष्यतीति श्रुत्वा नितान्तं सन्तुष्यमाणा वयं. अस्मत्सम्प्रदायाभिवर्धन कुतूहलानां भवतां, भवद्वंश परम्परायाश्च "युष्मत्सन्ततिजातानां दीर्घमायुर्भविष्यति". इत्याद्युक्तप्रकारेण चिरायुष्यं सकलसम्पत्-सन्तानाद्यनन्तश्रेयोभिवृद्धिञ्च सदा भगवतः श्रियःपतेस्सन्निधौ प्रार्थयामः॥

विलम्बिनामसंवत्सरे
वृश्चिकमासे कृष्णद्वितीया
शुक्रवारः
२८·११·५८

ஓம்

இராஜபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா சங்கத்தார் அளித்த

## டாக்டர் K. S. கிருஷ்ணன்

# மணிவிழா வாழ்த்து.

**7–12–1958**

மலர்தலை உலகில் மேலாம் மாண்புறு பார தத்தில்
நலந்தரு ஞானி யோரும் நானிலம் போற்றும் வீரர்
கலைகளில் வல்லோர் மற்றும் காவியம் இயற்றும் செல்வர்
அலகிலா அமரர் பல்லோர் அருள் மிக அவதரித்தார் !

உலகினில் உயர்ந்த நூல்கள் உன்னத மொழிகள் பண்பும்
பலபல வளங்கள் மல்கி பாரெலாம் சிறந்த நாட்டில்
நலமுள விஞ்ஞா னத்தை நாட்டினிற் களிக்கப் போந்த
புலவராம் டாக்டர் கிருஷ்ணன் புதுமைகள் புரந்து வாழி !

வளந்தரு பெருவிஞ் ஞானம் வளர்ப்பது மேற்கே யென்ற
களங்கமே தீர்க்க வந்த கண்ணியன் கடமை வீரன்
அளவிலாத் தொண்டு செய்தே அறுபது ஆண்டு கண்டான்
குளகனே அன்ன மேலும் கூடிய புகழால் வாழி !

கனபொருள் தன்மை தன்னைக் காந்தத்தால் அறியும் வித்தை
தினகரன் ஒளியின் ஆற்றல் திறமுடன் துய்க்கும் உண்மை
தனதரும் ஆய்வில் கண்டோன் தரணிவிஞ் ஞானி பல்லோர்
மனமகிழ்ந் தேத்தி நாளும் மாண்புற வாழ்த்த வாழி !

கலைகளில் களிப்பு மிக்கோன் கடவுளை மறவா மேலோன்
அலைகடல் அறிவு பெற்றேன் ஆற்றலும் மிகுதி யுள்ளோன்
நலமிகு குணங்கள் கொண்டோன் நானெனும் அகந்தை யற்றேன்
பலமொழி பயின்ற பண்பன் பார்புகழ் பொங்க வாழி !

வாழிவிஞ் ஞான மேதை வல்லனும் டாக்டர் கிருஷ்ணன்
வாழி பல்லாண்டு மேலும் வாகைகள் பலவும் சூடி
ஆழிசூழ் உலகம் ஏத்தும் அருள்குரு ராம கிருஷ்ணர்
வாழ்த்திட கிருஷ்ணன் நீடு வாழிய வாழ்க வாழி !

S. குமாரசாமி ராஜா,
(இயற்றியோன்)
A. சிவப்பிரகாசம்,
S. அர்ஜுன ராஜா,
காரியதரிசிகள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா சங்கத்தார்,
இராஜபாளையம்.

ஆறுமுகா பிரஸ், இராஜபாளையம்; —58.

ஓம்

# எங்கள் கிருஷ்ணன்

பாரத தேசம் பழம்பெரும் வேதாந்த ஞானமும் நாகரிகமும் மிகுந்தது; கலைச் செல்வங்கள் நிறைந்தது. பாரிலுள்ள செல்வங்கள் அனைத்தையும் படைத்த பாரத நாடு இடைக்காலத்தே அன்னியர் படையெடுப்புக்களால் நாட்டில் வளங்குன்றி, வாழ்வு குன்றி, வளர் கலைகள் குன்றி, அமைதி குன்றி அல்லலுற்றது. ஞானமும் விஞ்ஞானமும் தேயத் தலைப்பட்டன. ஆயினும் கரும பூமியாகிய இப்புண்ணிய நாட்டில் அவ்வப்போது ஞானியரும், யோகியரும், கவிஞர்களும், விஞ்ஞானிகளும் தோன்றி பழம் பெருமையை பழுதுருவண்ணம் காத்தனர்.

அண்மைக் காலத்தில் நம்நாட்டில் மேதை ஜகதீச சந்திரபோஸ், ஸர் C. V. ராமன், P. C. ராய் போன்ற விஞ்ஞான வித்தகர் பலர் தோன்றினர். நம் பாரதத்தின் தென் பகுதியில் உதித்த டாக்டர் K. S. கிருஷ்ணன், அவர்கள் இன்று உலக விஞ்ஞானியர் போற்றும் உயர் மேதையாய்த் திகழ்கின்றார். அவரைப் பெற்ற நாமும் நமது நாடும் பெருமிதம் கொள்கின்றோம்.

மக்களுக்கு இனம், மொழி, நாடு என்ற அபிமானம் இயற்கையாகத் தோன்றுகின்றது. அவ்வகையில் எங்கள் பிறப்பிடமாகிய ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் உதித்த உத்தம வித்தகரின் மேன்மைகளை எண்ணி உள்ளம் பூரிக்கின்றது; உவகை பொங்குகின்றது. "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச், சான்றோன் எனக்கேட்ட தாய்" — என்ற வள்ளுவரின் வாக்கை எண்ணி இம்பூது எய்துகின்றோம்.

டாக்டர் K. S. கிருஷ்ணன் அவர்கள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் கோதை பிறந்த திருத்தலத்திலே பயின்றவர். வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதையின் திருப்பாவை என்னும் தெள்ளமுதத்தைப் பருகி, உள்ளத்தில் கள்ளமிலா பக்தி நிறைந்தவர். உலகம் இப்புண்ணியனை பலவாறாகப் போற்றினார், அதனால் அவர் நெஞ்சத்தில் செருக்குச் சிறிதும் கொள்ளாதவர்; கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவர்.

இவரது உயர் ஞானம் விஞ்ஞானத்துறைக்கு பெரிதும் வேண்டியிருந்ததுபோலும்; இவர் ஸர் C. V. ராமனுடன் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, பல நுண்ணிய ஆராய்ச்சிகளைத் திண்ணிய முறையிலாற்றி வெற்றிகண்டார். இதை அறிந்த நமது பாரத அரசாங்கம் அவரை நன்கு பயன் படுத்திக்கொண்டது. இன்று வையகம் இவரை வானளாவப் புகழ்கின்றது! போற்றுகின்றது! வாழ்த்துகின்றது!.

பாரத நாட்டில் பிறந்த நாம் பழம் பெருமை மட்டும் பேசுவதில் சிறப்பில்லை. விஞ்[...] துறையில் மேல்நாட்டாரைவிட முன்னேற்றம் காணவேண்டும். ஆனால் நமது விஞ்ஞான வள[...] வையகத்தை வாழவைக்கவும், வளமாக்கவும் பயன்படவேண்டும்; ஆக்கப்பாதையில் அமைய வேண்டும். அதற்கு ஆத்ம ஞானத்துடன் கூடிய விஞ்ஞானமே துணைசெய்யும். அத்தகைய திருப்பணி செய்தற்கு டாக்டர் கிருஷ்ணனைப்போன்ற மேதைகள் எண்ணற்றோர் தோன்ற வேண்டும்; அப்போதுதான் பாரதியார் கூறியதுபோன்று "நம் பாரதநாடு பாருக்குள்ளே நல்ல நாடாக"த் திகழமுடியும்.

நமது வித்தகர் டாக்டர் K. S. கிருஷ்ணன் அவர்களுக்கு இன்று அறுபது ஆண்டுகள் நிறைந்துள்ளன. மணி விழா நடைபெறுகின்றது. இந்த நன்னாளில் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து பாருக்குப் பயனுள்ள பணிகள் பல புரிய அவருக்கு நீண்ட ஆயுளும், திடதேகமும், வளமைகள் பலவும் அருளிக் காக்குமாறு இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

இராஜபாளையம்,
1—12—58.

S. அர்ஜுன ராஜா,
ராமலக்ஷ்மி நிவாஸ்.

ஆறுமுகா பிரஸ், இராஜபாளையம்; —58.

உலகம் புகழ் விஞ்ஞானி உயர்திரு. பத்மவிபூஷணம் அறிஞர்

# டாக்டர் K. S. கிருஷ்ணன் D.Sc., F.R.S. அவர்களது

## அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் அன்னாருக்கு

ஸ்ரீவில்லிபுத்தூர்க் குரு ஞானசம்பந்தர் இந்து உயர்நிலைப் பள்ளியாம் அன்னை வழங்கும் ஆசி

# "அன்னையின் ஆசி"

**நிலைமண்டில ஆசிரியப்பா.**

இமயமும் கடலும் சூழ்ந்தே இலகி
எழில்மிக மேவும் இந்திய நாட்டின்
தலைநகர் தில்லித் தமிழ்ச்சங் கத்தின்
தலைமைப் பதவி தாங்கும் தகவோன்;
தெய்வ பக்தியிற் சிறந்த தமிழன்;
உளத்திலும் பிறப்பிலும் உண்மை வைணவன்;
ஆழ்வா ராதிகள் அரும்பா டலிலும்
அமுதாம் தமிழிலும் ஆர்வம் மிக்கோன்;
ஆங்கிலம் வடமொழி பாங்குடன் பயின்றோன்;
ஓங்கிய நோபல் வெகுமதி யுற்ற
பாங்கமை மேதை சி. வி. ராமன்
ஒளிக்கதிர் ஆய்வில் உடனிருந் துழைத்து
உலகப் புகழை யுற்ற விஞ் ஞானி;
லண்டனில் திகழும் ராயல் சொஸைட்டி
அங்கத் தினராய் அமர்ந்திடும் மேதை;
உலகினி லுள்ள உயர்விஞ் ஞானக்
கழகம் அனைத்தும் கண்டக மகிழ்ந்து
அறிஞன் என்னும் புகழினை யடைந்தோன்;
வத்திரா யிருப்பின் முத்தென வந்த
பத்மவி பூஷணம் பாரதத் தாயின்
புத்திரன் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்
இத்தினம் அறுபதாம் ஆண்டினை எய்தினன்!
நத்திடும் மணிவிழா தலைநகர் தில்லியில்
சீருறத் திகழும் பாரதப் பிரதமர்
நேருவும் டாக்டர் இராதா கிருஷ்ணனும்
மற்றும் இந்திய மாபெரும் தலைவரும்
உற்றிவ் விழாவை உயர்வாய் நிகழ்த்துவர்!
வத்திரா யிருப்பின் மாபெரும் புகழும்
இத்தரை மீது இனிதே உயரும்!
கீர்த்தி மிகுந்த கே. எஸ். கிருஷ்ணன்
வில்லிபுத் தூரில் விளங்கும் இந்து
உயர்நிலைப் பள்ளியில் உவப்புடன் கற்ற
மாணவ ரென்பதை மனதிற் கொண்மின்!
உலகப் புகழ்சேர் உத்தமர் பலரை
யுதவிய வில்லி புத்தூர் இந்து
உயர்நிலைப் பள்ளியாம் உத்தம மான
**அன்னையின் ஆசியால்** அவனியில் கிருஷ்ணன்
இன்னும் பன்னாள் இனிதே வாழ்ந்து
விஞ்ஞானத் துறையில் மிகுபணி யாற்றி
மெய்ஞ்ஞானி யாக மேன்மே லோங்கவும்
நாட்டுப் பணியும் நற்றமிழ்ப் பணியும்
தேட்டமா யாற்றிச் சீர்மிகப் பெறவும்
கார்முகில் வண்ணன் கண்ணன் தனக்குப்
பூமாலை யுடனே பாமாலை யதுவும்
சூடிக் கொடுத்த சுடர்க்கொடி யான
பாவையாம் ஆண்டாள் மேவியிங் கருள்க!

ஆக்கியோன்:—
கோம்பை அருட்கவி,
உயர்திரு. A. சுருளியாண்டிப்பாவலர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் இந்து உயர்நிலைப் பள்ளி,
நிருவாகக் குழுவினர்.

ஸ்ரீ ஆண்டாள் பிரஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். 11—58.

ஓம்

இராஜபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா சங்கத்தார் அளித்த

## டாக்டர் K. S. கிருஷ்ணன்

# மணிவிழா வாழ்த்து.

7—12—1958

மலர்தலை உலகில் மேலாம் மாண்புறு பார தத்தில்
நலந்தரு ஞானி யோரும் நானிலம் போற்றும் வீரர்
கலைகளில் வல்லோர் மற்றும் காவியம் இயற்றும் செல்வர்
அலகிலா அமரர் பல்லோர் அருள் மிக அவதரித்தார் !

உலகினில் உயர்ந்த நூல்கள் உன்னத மொழிகள் பண்பும்
பலபல வளங்கள் மல்கி பாரெலாம் சிறந்த நாட்டில்
நலமுள விஞ்ஞா னத்தை நாட்டினிற் களிக்கப் போந்த
புலவராம் **டாக்டர் கிருஷ்ணன்** புதுமைகள் புரந்து வாழி !

வளந்தரு பெருவிஞ் ஞானம் வளர்ப்பது மேற்கே யென்ற
களங்கமே தீர்க்க வந்த கண்ணியன் கடமை வீரன்
அளவிலாத் தொண்டு செய்தே அறுபது ஆண்டு கண்டான்
குளகனே அன்ன மேலும் கூடிய புகழால் வாழி !

கனபொருள் தன்மை தன்னைக் காந்தத்தால் அறியும் வித்தை
தினகரன் ஒளியின் ஆற்றல் திறமுடன் துய்க்கும் உண்மை
தனதரும் ஆய்வில் கண்டோன் தரணிவிஞ் ஞானி பல்லோர்
மனமகிழ்ந் தேத்தி நாளும் மாண்புற வாழ்த்த வாழி !

கலைகளில் களிப்பு மிக்கோன் கடவுளை மறவா மேலோன்
அலைகடல் அறிவு பெற்றேன் ஆற்றலும் மிகுதி யுள்ளோன்
நலமிகு குணங்கள் கொண்டோன் நானெனும் அகந்தை யற்றேன்
பலமொழி பயின்ற பண்பன் பார்புகழ் பொங்க வாழி !

வாழிவிஞ் ஞான மேதை வல்லனும் **டாக்டர் கிருஷ்ணன்**
வாழி பல்லாண்டு மேலும் வாகைகள் பலவும் சூடி
ஆழிசூழ் உலகம் ஏத்தும் அருள்குரு ராம கிருஷ்ணர்
வாழ்த்திட **கிருஷ்ணன்** நீடு வாழிய வாழ்க வாழி !

S. குமாரசாமி ராஜா,
(இயற்றியோன்)
A. சிவப்பிரகாசம்,
S. அர்ஜுன ராஜா,
காரியதரிசிகள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா சங்கத்தார்,
இராஜபாளையம்.

ஆறுமுகா பிரஸ், இராஜபாளையம்; —58.

ஓம்

# எங்கள் கிருஷ்ணன்

பாரத தேசம் பழம்பெரும் வேதாந்த ஞானமும் நாகரிகமும் மிகுந்தது; கலைச் செல்வங்கள் நிறைந்தது. பாரிலுள்ள செல்வங்கள் அனைத்தையும் படைத்த பாரத நாடு இடைக்காலத்தே அன்னியர் படையெடுப்புக்களால் நாட்டில் வளங்குன்றி, வாழ்வு குன்றி, வளர் கலைகள் குன்றி, அமைதி குன்றி அல்லலுற்றது. ஞானமும் விஞ்ஞானமும் தேயத் தலைப்பட்டன. ஆயினும் கரும பூமியாகிய இப்புண்ணிய நாட்டில் அவ்வப்போது ஞானியரும், யோகியரும், கவிஞர்களும், விஞ்ஞானிகளும் தோன்றி பழம் பெருமையை பழுதுருவண்ணம் காத்தனர்.

அண்மைக் காலத்தில் நம்நாட்டில் மேதை ஜகதீச சந்திரபோஸ், ஸர் C. V. ராமன், P. C. ராய் போன்ற விஞ்ஞான வித்தகர் பலர் தோன்றினர். நம் பாரதத்தின் தென் பகுதியில் உதித்த டாக்டர் K. S. கிருஷ்ணன், அவர்கள் இன்று உலக விஞ்ஞானியர் போற்றும் உயர் மேதையாய்த் திகழ்கின்றார். அவரைப் பெற்ற நாமும் நமது நாடும் பெருமிதம் கொள்கின்றோம்.

மக்களுக்கு இனம், மொழி, நாடு என்ற அபிமானம் இயற்கையாகத் தோன்றுகின்றது. அவ்வகையில் எங்கள் பிறப்பிடமாகிய ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் உதித்த உத்தம வித்தகரின் மேன்மைகளை எண்ணி உள்ளம் பூரிக்கின்றது; உவகை பொங்குகின்றது. "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச், சான்றோன் எனக்கேட்ட தாய்" — என்ற வள்ளுவரின் வாக்கை எண்ணி இம்பூது எய்துகின்றோம்.

டாக்டர் K. S. கிருஷ்ணன் அவர்கள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் கோதை பிறந்த திருத்தலத்திலே பயின்றவர். வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதையின் திருப்பாவை என்னும் தெள்ளமுதத்தைப் பருகி, உள்ளத்தில் கள்ளமிலா பக்தி நிறைந்தவர். உலகம் இப்புண்ணியனை பலவாறாகப் போற்றினும், அதனால் அவர் நெஞ்சத்தில் செருக்குச் சிறிதும் கொள்ளாதவர்; கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவர்.

இவரது உயர் ஞானம் விஞ்ஞானத்துறைக்கு பெரிதும் வேண்டியிருந்ததுபோலும்; இவர் ஸர் C. V. ராமனுடன் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, பல நுண்ணிய ஆராய்ச்சிகளைத் திண்ணிய முறையிலாற்றி வெற்றிகண்டார். இதை அறிந்த நமது பாரத அரசாங்கம் அவரை நன்கு பயன் படுத்திக்கொண்டது. இன்று வையகம் இவரை வானளாவப் புகழ்கின்றது ! போற்றுகின்றது ! வாழ்த்துகின்றது !.

பாரத நாட்டில் பிறந்த நாம் பழம் பெருமை மட்டும் பேசுவதில் சிறப்பில்லை. விஞ்ஞானத் துறையில் மேல்நாட்டாரைவிட முன்னேற்றம் காணவேண்டும். ஆனால் நமது விஞ்ஞான வளர்ச்சி வையகத்தை வாழவைக்கவும், வளமாக்கவும் பயன்படவேண்டும்; ஆக்கப்பாதையில் அமைய வேண்டும். அதற்கு ஆத்ம ஞானத்துடன் கூடிய விஞ்ஞானமே துணைசெய்யும். அத்தகைய திருப்பணி செய்தற்கு டாக்டர் கிருஷ்ணனைப்போன்ற மேதைகள் எண்ணற்றோர் தோன்ற வேண்டும்; அப்போதுதான் பாரதியார் கூறியதுபோன்று "நம் பாரதநாடு பாருக்குள்ளே நல்ல நாடாக"த் திகழமுடியும்.

நமது வித்தகர் டாக்டர் K. S. கிருஷ்ணன் அவர்களுக்கு இன்று அறுபது ஆண்டுகள் நிறைந்துள்ளன. மணி விழா நடைபெறுகின்றது. இந்த நன்னாளில் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து பாருக்குப் பயனுள பணிகள் பல புரிய அவருக்கு நீண்ட ஆயுளும், திடதேகமும், வளமைகள் பலவும் அருளிக் காக்குமாறு இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

இராஜபாளையம்,
1—12—58.

S. அர்ஜுன ராஜா,
ராமலக்ஷ்மி நிவாஸ்.

ஆறுமுகா பிரஸ், இராஜபாளையம்; —58.

ஓம்

இராஜபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா சங்கத்தார் அளித்த

# டாக்டர் K. S. கிருஷ்ணன்

# மணிவிழா வாழ்த்து.

**7–12–1958**

மலர்தலை உலகில் மேலாம் மாண்புறு பார தத்தில்
நலந்தரு ஞானி யோரும் நானிலம் போற்றும் வீரர்
கலைகளில் வல்லோர் மற்றும் காவியம் இயற்றும் செல்வர்
அலகிலா அமரர் பல்லோர் அருள் மிக அவதரித்தார் !

உலகினில் உயர்ந்த நூல்கள் உன்னத மொழிகள் பண்பும்
பலபல வளங்கள் மல்கி பாரெலாம் சிறந்த நாட்டில்
நலமுள விஞ்ஞா னத்தை நாட்டினிற் களிக்கப் போந்த
புலவராம் டாக்டர் கிருஷ்ணன் புதுமைகள் புரந்து வாழி !

வளந்தரு பெருவிஞ் ஞானம் வளர்ப்பது மேற்கே யென்ற
களங்கமே தீர்க்க வந்த கண்ணியன் கடமை வீரன்
அளவிலாத் தொண்டு செய்தே அறுபது ஆண்டு கண்டான்
குளகனே அன்ன மேலும் கூடிய புகழால் வாழி !

கனபொருள் தன்மை தன்னைக் காந்தத்தால் அறியும் வித்தை
தினகரன் ஒளியின் ஆற்றல் திறமுடன் துய்க்கும் உண்மை
தனதரும் ஆய்வில் கண்டோன் தரணிவிஞ் ஞானி பல்லோர்
மனமகிழ்ந் தேத்தி நாளும் மாண்புற வாழ்த்த வாழி !

கலைகளில் களிப்பு மிக்கோன் கடவுளை மறவா மேலோன்
அலைகடல் அறிவு பெற்றோன் ஆற்றலும் மிகுதி யுள்ளோன்
நலமிகு குணங்கள் கொண்டோன் நானெனும் அகந்தை யற்றோன்
பலமொழி பயின்ற பண்பன் பார்புகழ் பொங்க வாழி !

வாழிவிஞ் ஞான மேதை வல்லனும் டாக்டர் கிருஷ்ணன்
வாழி பல்லாண்டு மேலும் வாகைகள் பலவும் சூடி
ஆழிசூழ் உலகம் ஏத்தும் அருள்குரு ராம கிருஷ்ணர்
வாழ்த்திட கிருஷ்ணன் நீடு வாழிய வாழ்க வாழி !

S. குமாரசாமி ராஜா, (இயற்றியோன்)
A. சிவப்பிரகாசம்,
S. அர்ஜுன ராஜா,
காரியதரிசிகள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா சங்கத்தார்,
இராஜபாளையம்.

ஆறுமுகா பிரஸ், இராஜபாளையம்; —58.